அவசரக்கூட்டம்

**வேதாரண்யம்** நகராட்சியின் 2022-ம் ஆண்டு ஏப்ரல் **மாதம்** 11 ம் நாள் திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை : திரு.மா.மீ. புகழேந்தி,**

**நகர்மன்றத்தலைவர்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 11.04.2022 | **பொருள் எண்.1**<br>தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.<br>15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.<br>அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.<br>தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய | **தீர்மான எண்.7**<br>அனுமதிக்கப்பட்டது |

அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>சொத்துவரி:</u>**

குடியிருப்பு கட்டடங்கள்(**Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(**Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள

உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு:**

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டடுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் வேதாரண்யம் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி **(Current Liabilities)** (ரூ.கோடியில்) |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 0.10 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 0.03 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) | 0.90 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | – |
| | மொத்தம் | 1.03 |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், வேதாரண்யம் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு

| | | |
|---|---|---|
| | தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.<br>7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.<br>8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.<br>**விடுபட்டுள்ள தெருக்கள்–**<br>1. ஸ்வஸ்திக் நகர் – "B" மண்டலம்<br>2. பெரியார் நகர் – "B" மண்டலம் | |
| 11.04.2022 | **பொருள் எண்.2**<br>வேதாரண்யம் நகராட்சியில் ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அலுவலக பயன்பாட்டிற்கு இரண்டு எண்ணிக்கை ஈப்பு வாகனம் மட்டுமே உள்ளது. தற்போது இந்நகராட்சியில் 04.02.2022 அன்று இந்நகராட்சியின் நகர்மன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவியேற்ற புதிய நகர்மன்றத்தலைவர் அவர்களுக்கு அவரது பயன்பாட்டிற்கு ஈப்பு வாகனம் தேவைப்படுவதால் நகரரட்சி பொதுநிதியிலிருந்து அரசு நிர்ணயித்த GEM Rate-ல் ஜெம் போர்ட்டலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி Mahindra Bolero B4 BSVL வாகனம் வாங்கிடலாம். இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10.00 லட்சம் ஆகும். இதற்கான முன்மொழிவுகளை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு– 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்கண்ட பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று முன்மொழிவுகளை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பியதை மன்றம் ஏற்கலாம். | **தீர்மான எண்.8**<br>அனுமதிக்கப்பட்டது |
| 11.04.2022 | **பொருள் எண்.3**<br>அரசாணை (நிலை) எண்,52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MAIV) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களின் 01.04.2022 தேதிய ந.க.40032/2012/ஆர்–1 எண் சுற்றறிக்கையின்படி, 01.04.2022 முதல் சொத்துவரி சீராய்வு செய்திட ஆணை வெளியிடப்பட்டு வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது.<br>அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையின்படி 01.04.2022 முதல் சொத்துவரி சீராய்விற்கு ஏற்கனவே உள்ள மண்டலங்களை மறு நிர்ணயம் செய்து, மண்டலங்கள் மறுசீராய்வு செய்திடவும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>மண்டலம் \| 01.04.2008ல் சதுர அடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை \| 01.04.2022ல் நிர்ணயம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை | **தீர்மான எண்.9**<br>அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MAIV) துறை நாள்.30.03.2022ன்படி 01.04.2022 முமதல சொத்துவரி சீராய்வு செய்திட ஆணை |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>A</td><td>0.75 பைசா</td><td>1.00 ரூபாய்</td></tr>
<tr><td>B</td><td>0.55 பைசா</td><td>0.75 பைசா</td></tr>
<tr><td>C</td><td>0.35 பைசா</td><td>0.50 பைசா</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : இந்நகராட்சியில் தற்போது சொத்துவரி மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்திலிருந்து இந்நகர மக்களுக்கு செய்து கொடுக்கப்பட வேண்டிய குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, சாலைகள் வசதி போன்ற அடிப்படை வசதி பணிகளுக்கு தேவையான நிதி வசதி குறைவாக உள்ளதால், மேற்படி அடிப்படை வசதிகளை தங்கு தடையின்றி நிறைவேற்றிட ஏதுவாக சொத்துவரி மூலம் கிடைக்கும் வருவாயை பெருக்கும் பொருட்டு 01.04.2022 முதல் சொத்துவரி சீராய்விற்கு ஏற்கனவே உள்ள மண்டலங்களை மறு நிர்ணயம் செய்து, மண்டலங்கள் மறுசீராய்வு செய்திடவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம
</td>
<td>வெளியிடப்பட்டுள்ளதால் தற்சமயம் வரி உயர்வு செய்ய தேவையில்லை என தீர்மானிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>11.04.2022</td>
<td>
<u>பொருள் எண்.4</u><br><br>
வேளாண்மைத் துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) நாகப்பட்டினம் அவர்களது கடித எண்.ஆ/197/2020 நாள்.25.03.2022-ன்படி வேதாரண்யம் நகராட்சிப்பகுதியில் உழவர் சந்தை நடத்துவதற்கு வேளாண்மைத்துறையினால் இடம் வழங்கிட கோரப்பட்டுள்ளதை தொடர்ந்து, வார்டு எண்.10-ல் சர்வே எண்.175/280-ல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இராஜாஜி பூங்காவின் தெற்கு பகுதியில் கிழக்கு மேற்காக பதினைந்து கடைகள் கட்ட 120 அடி நீளமும், 11.5 அடி அகலமும் கொண்ட 1380 சதுரஅடி இடமும் மற்றும் 15 x 15அடி அளவில் அலுவலக கட்டிடம் கட்ட 225 சதுர அடியும் இடமும் மொத்தமாக 1605 சதுரஅடி இடம் உழவர் சந்தை அமைக்க வேளாண்மைத்துறைக்கு பொதுப்பணித்துறையின் வாடகை மதிப்பீட்டின்படி நிர்ணயம் செய்து மாத வாடகை அடிப்படையில் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு: நகராட்சியின் நிபந்தனைகளுக்குட்பட்டு வேளாண்மைத்துறைக்கு இடம் வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td><u>தீர்மான எண்.10</u><br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

நகர்மன்றத்தலைவர்,
வேதாரண்யம் நகராட்சி.

சாதாரணக்கூட்டம்

**வேதாரண்யம்** நகராட்சியின் 2022-ம் ஆண்டு ஏப்ரல் **மாதம்** 28 ம் நாள் திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை : திரு.மா.மீ. புகழேந்தி,**

நகர்மன்றத்தலைவர்

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 28.04.2022 | **பொருள் எண்.1**<br><br>வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3ல் அரியபிள்ளை தோப்பு, வார்டு எண்.4ல் ஆறுகாட்டுத்துறை வடக்குத்தெரு, ஆறுகாட்டுத்துறை எம்.ஜி.ஆர். தெரு, வார்டு எண்.5ல் பனையன்காடு, வார்டு எண்.6ல் கள்ளிக்காட்டான் அடைப்பு, வார்டு எண்.7-ல் மூர்த்தியன்காடு, முதலியார்தோப்பு மாரியம்மன் கோயில் முதல் நடுக்காடு ஆகிய ஆகிய பகுதிகளில் தண்ணீர் செல்லாததால் அப்பகுதி வாழ் மக்களுக்கு கொள்ளிடம் கூட்டு குடிநீர் விநியோகம் வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்ததன் அடிப்படையில், நகர்மன்றத்தலைவர், ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களுடன் நேரில் இடத்தினை ஆய்வு செய்தபோது வழங்கிய அறிவுரைகளின்படியும், மேற்குறிப்பிட்ட இடங்களில் குடிநீர் பகிர்மானக்குழாய் அமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இப்பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7,80,000/-ம் ஆகும். இப்பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தினை நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். பின்வருங்காலத்தில் அம்ரூட் திட்ட நிதி / குடிநீர் திட்ட சிறப்புநிதி / வறட்சி நிவாரணத்திட்ட நிதி ஏதேனும் பெறப்பட்டால் மேற்கண்ட செலவினத்தொகையினை ஈடு செய்திடும் வகையில் குடிநீர்நிதியில் வரவு வைத்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்.479/2022 இ1) | **தீர்மான எண்.11**<br>அனுமதிக்கப்பட்டது |
| 28.04.2022 | **பொருள் எண்.2**<br><br>வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8 சோமநாதர் கோயில் தெற்கு, வார்டு எண்.9 | **தீர்மான எண்.12**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அர்ச்சரக்கட்டளை, காந்திநகர் முதல் மந்தித்தோப்பு வரை, வார்டு எண். 10-ல் வண்ணாரத்தெரு முதல் கீழஆறுமுககட்டளை ஆகிய பகுதிகளில் தண்ணீர் செல்லாததால் அப்பகுதி வாழ் மக்களுக்கு கொள்ளிடம் கூட்டு குடிநீர் விநியோகம் வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்ததன் அடிப்படையில், நகர்மன்றத்தலைவர், ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களுடன் நேரில் இடத்தினை ஆய்வு செய்தபோது வழங்கிய அறிவுரைகளின்படியும், மேற்குறிப்பிட்ட இடங்களில் குடிநீர் பகிர்மானக்குழாய் அமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இப்பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8,00,000/-ம் ஆகும். இப்பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தினை நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். பின்வருங்காலத்தில் அம்ருட் திட்ட நிதி / குடிநீர் திட்ட சிறப்புநிதி / வறட்சி நிவாரணத்திட்ட நிதி ஏதேனும் பெறப்பட்டால் மேற்கண்ட செலவினத்தொகையினை ஈடு செய்திடும் வகையில் குடிநீர்நிதியில் வரவு வைத்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்.437/2022 இ1) | |
| 28.04.2022 | <u>**பொருள் எண்.3**</u><br><br>வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13ல் மோட்டாண்டித்தோப்பு சுனாமிநகர், பொன்னாங்கொல்லை, வார்டு எண்.16 அங்காளம்மன்கோயில் முதல் குமரன்காடு ஆகிய ஆகிய பகுதிகளில் தண்ணீர் செல்லாததால் அப்பகுதி வாழ் மக்களுக்கு கொள்ளிடம் கூட்டு குடிநீர் விநியோகம் வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்ததன் அடிப்படையில், நகர்மன்றத்தலைவர், ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களுடன் நேரில் இடத்தினை ஆய்வு செய்தபோது வழங்கிய அறிவுரைகளின்படியும், மேற்குறிப்பிட்ட இடங்களில் குடிநீர் பகிர்மானக்குழாய் அமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இப்பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8,70,000/-ம் ஆகும். இப்பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தினை நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். பின்வருங்காலத்தில் அம்ருட் திட்ட நிதி / குடிநீர் திட்ட சிறப்புநிதி / வறட்சி நிவாரணத்திட்ட நிதி ஏதேனும் பெறப்பட்டால் மேற்கண்ட செலவினத்தொகையினை ஈடு செய்திடும் வகையில் குடிநீர்நிதியில் வரவு வைத்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | <u>**தீர்மான எண்.13**</u><br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | (ந.க.எண்.479/2022 இ1) | |
| 28.04.2022 | <u>பொருள் எண்.4</u><br><br>வேதாரண்யம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.16ல் சேதுரஸ்தா முதல் பயத்தவரன்காடு வரை, வார்டு எண்.16 கொல்லைக்காடு முதல் கூத்ததேவன்காடு, வார்டு எண்.17 சர்வகட்டளை, வார்டு எண்.19 வேம்பதேவன்காடு ஆகிய பகுதிகளுக்கு குடிதண்ணீர் செல்லாததாலும், புதியதாக குடிநீர் இணைப்பு வழங்க வேண்டியும் அப்பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க வேண்டியும் அப்பகுதி வாழ் பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கையின்படியும் நகர்மன்றத்தலைவர், ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களுடன் நேரில் இடத்தினை ஆய்வு செய்தபோது வழங்கிய அறிவுரைகளின்படியும், மேற்குறிப்பிட்ட இடங்களில் குடிநீர் பகிர்மானக்குழாய் அமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இப்பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9,50,000/-ம் ஆகும். இப்பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தினை நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். பின்வருங்காலத்தில் அம்ருட் திட்ட நிதி / குடிநீர் திட்ட சிறப்புநிதி / வறட்சி நிவாரணத்திட்ட நிதி ஏதேனும் பெறப்பட்டால் மேற்கண்ட செலவினத்தொகையினை ஈடு செய்திடும் வகையில் குடிநீர்நிதியில் வரவு வைத்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்.590/2022 இ1) | **<u>தீர்மான எண்.14</u>**<br>அனுமதிக்கப்பட்டது |
| 28.04.2022 | <u>பொருள் எண்.5</u><br><br>வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20ல் மாதாகோயில் தெரு, கனக்கன்காடு, வார்டு எண்.21-ல் பூவன்தோப்புக்கு தண்ணீர் செல்ல ரயில்வே கிராசிங் (Railway Crossing) சப்வே (Subway) இல் பைப்லைன் அமைக்க பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கையின்படியும் நகர்மன்றத்தலைவர், ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களுடன் நேரில் இடத்தினை ஆய்வு செய்தபோது வழங்கிய அறிவுரைகளின்படியும், மேற்குறிப்பிட்ட இடங்களில் குடிநீர் பகிர்மானக்குழாய் அமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இப்பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9,45,000/-ம் ஆகும். இப்பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தினை நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். பின்வருங்காலத்தில் அம்ருட் திட்ட நிதி / குடிநீர் திட்ட சிறப்புநிதி / வறட்சி நிவாரணத்திட்ட நிதி ஏதேனும் | **<u>தீர்மான எண்.15</u>**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | பெறப்பட்டால் மேற்கண்ட செலவினத்தொகையினை ஈடு செய்திடும் வகையில் குடிநீர்நிதியில் வரவு வைத்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்.450/2022 இ1) | |
| 28.04.2022 | **பொருள் எண்.6**<br><br>வேதாரண்யம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 21 வரை எதிர்வரும் கோடைகால வறட்சியினை சமாளிக்க அடிபம்புகள் அமைக்க வேண்டியுள்ளது. பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கை மனுவின்படியும் நகர்மன்றத்தலைவர், ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களுடன் நேரில் இடத்தினை ஆய்வு செய்தபோது வழங்கிய அறிவுரைகளின்படியும், இடம் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8,20,000/-ம் ஆகும். இப்பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். பின்வருங்காலத்தில் அம்ருட் திட்ட நிதி / குடிநீர் திட்ட சிறப்புநிதி / வறட்சி நிவாரணத்திட்ட நிதி ஏதேனும் பெறப்பட்டால் மேற்கண்ட செலவினத்தொகையினை ஈடு செய்திடும் வகையில் பொதுநிதியில் வரவு வைத்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்.590/2022 இ1) | **தீர்மான எண்.16**<br>அனுமதிக்கப்பட்டது |
| 28.04.2022 | **பொருள் எண்.7**<br><br>நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினராக (1971, 1977 மற்றும் 1984) மூன்று முறை பதவியில் இருந்து, வேதாரண்யம் நகராட்சியில் 2006 முதல் 2011 வரை நகர்மன்றத்தலைவராக பதவியில் இருந்து, கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் பதவி வகித்து நகர்பகுதி வாழ் மக்களுக்கு பல நலத்திட்டங்களை கொண்டு வந்து பொதுமக்களின் அடிப்படை தேவைகள் அனைத்தையும் தட்டுபாடின்றி மக்களுக்கு கிடைக்க வழிவகை செய்து, நகர்ப்பகுதியின் முக்கியத்தொழிலான உப்பு உற்பத்தியை பெருக்கவும், தொழிலாளர் முன்னேற்றத்திற்கும் அரும்பாடுபட்டு, தன்வாழ்நாள் முழுவதும் இந்நகர் பகுதிவாழ் மக்களின் முன்னேற்றத்திற்காகவே அர்ப்பணித்து மறைந்த மானமிகு. மா. மீனாட்சிசுந்தரம் அவர்களின் புகைப்படத்தை வேதாரண்யம் நகராட்சியின் கூட்ட அரங்கிலும், நகர்மன்றத்தலைவர் அறையிலும் வைக்க தீர்மானம் | **தீர்மான எண்.17**<br>அனுமதிக்கப்பட்டது |

நிறைவேற்றித்தரும்படி, நகர்மன்ற துணைத்தலைவர் திருமதி. ஆர். மங்களநாயகி அவர்கள் கடிதம் அளித்துள்ளார்கள். இவரது கோரிக்கையினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

28.04.2022

**பொருள் எண்.8**

நகராட்சிப்பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021-22ன்கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 24.03.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தகாரர் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வேதாரண்யம் நகராட்சி வார்டு எண்.7 முதலியார்தோப்பு மாரியம்மன் கோயில் சாலை தார்சாலை ஆக்குதல் (55 மீ) | 4.00 | என்.முத்துக்குமரன், தலைஞாயிறு | 0.11% அதிகம் |
| | | | அ. அன்பழகன், நாககுடையான் | 0.02% குறைவு |
| 2 | வேதாரண்யம் நகராட்சி வார்டு எண்.19 வேம்பதேவன்காடு பக்தர்குளம் மாரியம்மன் கோயில் இணைப்பு சாலையில் ஆர்.சி.சி. கல்வர்ட் கட்டுதல் | 10.00 | என்.முத்துக்குமரன், தலைஞாயிறு | 0.01% குறைவு |
| | | | அ. அன்பழகன், நாககுடையான் | 0.13% அதிகம் |

அலுவலக குறிப்பு : 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1-ற்கான பணிக்கு மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்தக்காரர் ‘‘திரு.அ. அன்பழகன், நாககுடையான்’’ என்பவரின் ஒப்பந்தப்புள்ளியையும், வ.எண்.2-ற்கான பணிக்கு மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்தக்காரர் ‘‘திரு.என்.முத்துக்குமரன், தலைஞாயிறு’’ என்பவரின் ஒப்பந்தப்புள்ளியையும் மன்றம் ஏற்கலாம்.

2) மேலும் பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில்கொண்டு நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கிய அலுவலக நடவடிக்கையினையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.18**

அங்கீகரிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 28.04.2022 | **<u>பொருள் எண்.9</u>**<br><br>சிறப்பு சாலைகள் திட்டம் **2020-21** திட்டத்தின்கீழ் தேரோடும் வீதிகள் இருபுறமும் மழைநீர் வடிகால் அமைக்கும்பணி நடைபெற்று வருகிறது. அந்த மூன்று தேர் வீதிகளிலும் உள்ள மின்கம்பங்கள் மற்றும் மின்மாற்றிகளை புதியதாக அமைக்கப்படும் மழைநீர் வடிகாலுக்கும், நடைபாதைக்கும் இடையில் நான்கு மின்மாற்றி உயர் அழுத்த மின்பாதை மற்றும் 3 தாழ்வழுத்த மின்பாதைகள் மாற்றியமைக்க விண்ணப்பக்கட்டணம் ரூ.**5074/-**ஐ செலுத்திடக்கோரி இளமின்பொறியாளர், இயக்குதலும், பராமரித்தலும், வேதாரண்யம் க.எண்.இமிபொ/வேதை/கோDCW/எண்.**144/22**நாள்.**19.04.2022**-ன்படி கடிதம் வரப்பெற்றுள்ளது. இத்தொகையினை தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று தொகை செலுத்திய அலுவலக நடவடிக்கையினை மன்றம் அனுமதிக்கலாம். | **<u>தீர்மான எண்.19</u>**<br>அனுமதிக்கப்பட்டது |
| 28.04.2022 | **<u>பொருள் எண்.10</u>**<br><br>**தேசிய நகர்ப்புற வாழ்வாதார முகமை** (NULM 2020-21) நிதியின்கீழ், வேதாரண்யம் தலைமை அரசு மருத்துவமனையில் நோயாளிகளின் பாதுகாவலர் தங்குமிடம் ரூ.**85.00** இலட்சத்திற்கு பணி மேற்கொள்வது தொடர்பான **05.01.2022**-ந்தேதிய டெண்டர் விளம்பரம் **30.12.2021** அன்றைய தீக்கதிர் நாளிதழ் மற்றும் Business Standard நாளிதழிலும் பிரசுரம் செய்யப்பட்டதற்கான (Invoice No.232/21-22 Dt.03.01.2022) விளம்பரக்கட்டணம் ரூ.**6187/-**ஐ "Adsense, Chennai" நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | **<u>தீர்மான எண்.20</u>**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.04.2022 | **<u>பொருள் எண்.11</u>**<br><br>வேதாரண்யம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.12-ல் உள்ள துாய்மை பணியாளர் குடியிருப்பு கிணறு மற்றும் ராமகிருஷ்ணாபுரம் மெயின் மற்றும் குறுக்கு தெருவில் உள்ள இரண்டு கிணறுகள் ஆகிய 3 கிணறுகளையும் துார்வாரி கம்பி வலை அமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கைக்கு இணங்க நகர்மன்றத்தலைவர், ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களுடன் நேரில் இடத்தினை ஆய்வு செய்தபோது வழங்கிய அறிவுரைகளின்படியும், இடம் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,00,000/-ம் ஆகும். இப்பணி அத்தியாவசியப்பணி என்பதால் பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு இப்பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.590/2022 இ1) | **<u>தீர்மான எண்.21</u>**<br>அனுமதிக்கப்பட்டது |
| 28.04.2022 | **<u>பொருள் எண்.12</u>**<br>வேதாரண்யம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.7–ல் உள்ள முதலியார்தோப்பு அங்கன்வாடி மேற்கூரை மற்றும் கதவுகள் மிகவும் சேதமடைந்து உள்ளதால் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை உள்ளது. எனவே கட்டிடத்தை பராமரிப்பு பணி செய்யவும் மற்றும் திருவாசக்குளம் பேருந்து நிறுத்தம் மிகவிம சேதடைந்து உள்ளதால் பொதுமக்கள் மிகவும் சிரப்படுகின்றனர். பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் கோரிக்கை மனுவின்படியும் நகர்மன்றத்தலைவர், ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களுடன் நேரில் இடத்தினை ஆய்வு செய்தபோது வழங்கிய அறிவுரைகளின்படியும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,40,000/-ம் ஆகும். இப்பணி அத்தியாவசிய பணி என்பதால் பணியின் அவசர, அவசியம் கருதியும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டும் பணியினை உடனே மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.590/2022 இ1) | **<u>தீர்மான எண்.22</u>**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.04.2022 | **பொருள் எண்.13**<br>வேதாரண்யம் நகராட்சி பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் குடிநீர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் குடிநீர் பகிர்மானக்குழாய்களில் மேற்கொள்ளப்படும் பராமரிப்பு பணியின் காரணமாக குடிநீர் விநியோகம் செய்யப்படாமல் தடைசெய்யப்படும் போது பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட ஏதுவாக டேங்கர் லாரி வாடகை அடிப்படையில் அமர்த்திக்கொள்ளும் பணி மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது. மேற்கண்ட பணிகளை விலைப்புள்ளிகள் பெற்று அதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.8.00 இலட்சம் ஆகும். இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். தற்சமயம் இச்செலவினத்தினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும், வருங்காலத்தில் வறட்சி நிவாரணத்திட்ட நிதி ஏதேனும் பெறப்பட்டால் மேற்கண்ட செலவினத்தொகையினை ஈடு செய்திடும் வகையில் பொதுநிதியில் வரவு வைத்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.23**<br>அனுமதிக்கப்பட்டது |
| 28.04.2022 | **பொருள் எண்.14**<br>வேதாரண்யம் நகராட்சி பகுதியில் நகராட்சி பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான சாலைகளின் ஓரங்கள் மற்றும் பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள பகுதிகளில் மண்டியுள்ள சீமை கருவேல புதர்கள் மற்றும் முட்களை அகற்றும்பணி மேற்கொள்ள வேண்டியது மிகவும் ஆகிறது. இப்பணிக்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.5,00,000/-ம் ஆகும். இப்பணி அத்தியாவசிய பணி என்பதால் பணியின் அவசர, அவசியம் கருதியும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டும் பணியினை உடனே மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். இச்செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். பின்வருங்காலத்தில் சீமைகருவேல மரங்கள் அகற்றும் பணிக்கு திட்டநிதி ஏதேனும் வரப்பெற்றால் மேற்கண்ட செலவினத்தொகையினை ஈடு செய்திடும் வகையில் பொதுநிதியில் வரவு வைத்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.590/2022 இ1)** | **தீர்மான எண்.24**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.04.2022 | **<u>பொருள் எண்.15</u>**<br><br>வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட ஆறுகாட்டுத்துறையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2020-1ன்கீழ் ரூ.19.18 லட்சத்திற்கு அமையப்பெற்றுள்ள குடிநீர் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு குடிநீர் விஸ்தரிப்பு குழாயில் இருந்து இணைப்பு கொடுக்கவும் புதியதாக மின் மோட்டார் அமைத்து அதற்கு புதிய மின் இணைப்பு கொடுத்து குடிநீர் வழங்கும் பணிக்கு ரூ.1.75 இலட்சம் மதிப்பீடு ஆகும். பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு மாவட்ட நகராடசிகள் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் ஒப்பந்தக்காரர் திரு.எம். குமரசாமி என்பவரிடம் மதிப்பீட்டு விலைவிகித்தில் பணி செய்து முடிக்க ஒப்புதல் பெற்று பணி முடிக்கப்பட்டுள்ளது. இச்செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைத்திடலாம்.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்திடலாம். | **<u>தீர்மான எண்.25</u>**<br>பதிவு செய்யப்பட்டது |
| 28.04.2022 | **<u>பொருள் எண்.16</u>**<br><br>வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள குளங்களில் தற்போது கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் (KNMT Scheme Reserve Fund) 2021-2022க்கீழ் நகராட்சிக்குட்பட்ட குளங்கள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ள ரூ.73.00 லட்சம் மதிப்பீட்டில் உப்புகுளம் மேம்படுத்தும் பணி தெரிவு செய்யப்பட்டு விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் (KNMT Scheme Reserve Fund) 2021-2022க்கீழ் ரூ.73.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கிடக்கோரி கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: (1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>(2) மேற்கண்ட பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு மன்ற | **<u>தீர்மான எண்.26</u>**<br>ஏற்கப்பட்டது |
| 28.04.2022 | **<u>பொருள் எண்.17</u>**<br><br>வேதாரண்யம் நகர்மன்றத்தலைவர் அவர்களது அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக ஒரு கணிணியும், ஒரு பிரிண்டர், ஒரு UPS மற்றும் Router வாங்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. அந்த கணிணி வைப்பதற்கு ஒரு கணிணி மேஜை மற்றும் ஒரு நாற்காலி வாங்க வேண்டியது அவசியமாகிறது. இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1.25 லட்சம் ஆகும். இச்செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். | **<u>தீர்மான எண்.27</u>**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.04.2022 | **பொருள் எண்.18**<br><br>வேதாரண்யம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய பேருந்து கட்டண வசூல் உரிமம் 2022-2023ம் ஆண்டு முதல் மூன்றாண்டு தொகுப்பு கால அளவிற்கு 2024-2025 வரை ஒப்பந்தப்புள்ளி கோர, பொது ஏலம் அறிவிக்கப்பட்டு 25.02.2021, 09.03.2021, 23.07.2021, 13.08.2021, 28.09.2021, 22.12.2021 ஆகிய தேதிகளில் ஏலம் கோரப்பட்டதில் யாரும் முன்வரவில்லை. மேலும், 26.01.2022 முதல் தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் இருந்ததால் தொடர்ந்து துறை வசூல் மூலம் மேற்படி கட்டணம் வசூல் செய்யப்பட்டு வந்தது. தற்பொழுது 08.04.2022 அன்று நடைபெற்ற ஏலத்தில் திருமதி. எம்.புஷ்பலதா என்பவர் மட்டுமே கலந்து கொண்டு அதிகபட்ச ஏலத்தொகை ரூ.100500/- ஏலம் கோரியுள்ளார். 2019-2020ம் ஆண்டு ஏல கேட்பு தொகை ரூ.135600/- ஆகும். இந்நிலையில் கொரோனா கால கட்டங்களில் தமிழக அரசால் முழு ஊரடங்கு மற்றும் சில கட்டுபாடுகள் விதிக்கப்பட்டதால் அதிக அளவில் பேருந்துகள் ஏதுவும் ஓடாத நிலையில் 2020-2021 மற்றும் 2021-2022 ஆகிய ஆண்டுகளும் துறை மூலம் வசூல் மேற்கொண்டு வருவதால் நிர்வாக நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு ரசீது புத்தகம் அச்சிடுவது, பணியாளர் ஊதியம் மற்றும் ஒவ்வொரு வருடமும், 5% குத்தகை உயர்வு ஆகியவற்றை கருத்தில் கொண்டு பேருந்து நிலையத்திற்கு தினமும் 75 பேருந்துகள் செல்வதாலும் மேற்படி ஏல கேள்வி எழுப்பிய திருமதி. எம்.புஷ்பலதா என்பவருக்கு மேற்படி குத்தகை உரிமத்தை ஒப்படைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு   பேருந்து நிலைய பேருந்து கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு பலமுறை ஏலம் கோரியும் துறை மூலம் வசூல் மேற்கொண்டு வருவதால் நிர்வாக நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு, பணியாளர் ஊதியம் மற்றும் ஒவ்வொரு வருடமும், 5% குத்தகை உயர்வு ஆகியவற்றை கருத்தில் கொண்டு தற்பொழுது ஏலம் கோரியுள்ள திருமதி. எம்.புஷ்பலதா என்பவரின் ஏல கேள்வியை உறுதி செய்து குத்தகை உரிமத்தை ஒப்படைக்க மன்றம் அனுமதி வழங்கலாம். | **தீர்மான எண்.28**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.04.2022 | **பொருள் எண்.19**<br><br>வேதாரண்யம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கட்டண கழிவறை வசூல் உரிமம் 2022-2023ம் ஆண்டு முதல் மூன்றாண்டு தொகுப்பு கால அளவிற்கு 2024-2025 வரை ஒப்பந்தப்புள்ளி கோர, பொது ஏலம் அறிவிக்கப்பட்டு 25.02.2021, 09.03.2021, 23.07.2021, 13.08.2021, 28.09.2021, 22.12.2021 ஆகிய தேதிகளில் ஏலம் கோரப்பட்டதில் யாரும் முன்வரவில்லை. மேலும், 26.01.2022 முதல் தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் இருந்ததால் தொடர்ந்து துறை வசூல் மூலம் மேற்படி கட்டணம் வசூல் செய்யப்பட்டு வந்தது. தற்பொழுது 08.04.2022 அன்று நடைபெற்ற ஏலத்தில் திருமதி. எம்.புஷ்பலதா என்பவர் மட்டுமே கலந்து கொண்டு அதிகபட்ச ஏலத்தொகை ரூ.60000/- ஏலம் கோரியுள்ளார். 2019-2020ம் ஆண்டு ஏல கேட்பு தொகை ரூ.48000/- ஆகும். இந்நிலையில் கொரோனா கால கட்டங்களில் தமிழக அரசால் முழு ஊரடங்கு மற்றும் சில கட்டுபாடுகள் விதிக்கப்பட்டதால் அதிக அளவில் பேருந்துகள் ஏதுவும் ஒடாத நிலையில் பயணிகள் யாரும் வரரததால் 2020-2021 மற்றும் 2021-2022 ஆகிய ஆண்டுகளும் துறை மூலம் வசூல் மேற்கொண்டு வருவதால் நிர்வாக நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு ரசீது புத்தகம் அச்சிடுவது, பணியாளர் ஊதியம் மற்றும் ஒவ்வொரு வருடமும், 5% குத்தகை உயர்வு ஆகியவற்றை கருத்தில் கொண்டு மேற்படி ஏல கேள்வி எழுப்பிய திருமதி. எம்.புஷ்பலதா என்பவருக்கு மேற்படி குத்தகை உரிமத்தை ஒப்படைக்க மன்ற முன் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: பேருந்து நிலைய கட்டண கழிவறை வசூல் செய்யும் உரிமத்திற்கு பலமுறை ஏலம் கோரியும் துறை மூலம் வசூல் மேற்கொண்டு வருவதால் நிர்வாக நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு, பணியாளர் ஊதியம் மற்றும் ஒவ்வொரு வருடமும், 5% குத்தகை உயர்வு ஆகியவற்றை கருத்தில் கொண்டு தற்பொழுது ஏலம் கோரியுள்ள திருமதி. எம்.புஷ்பலதா என்பவரின் ஏல கேள்வியை உறுதி செய்து குத்தகை உரிமத்தை ஒப்படைத்ததை மன்றம் அங்கீகரிக்கலாம். | **தீர்மான எண்.29**<br>அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.04.2022 | **<u>பொருள் எண்.20</u>**<br><br>வேதாரண்யம் நகராட்சிக்கு சொந்தமான தோப்புத்துறை செக்போஸ்ட் வசூல் உரிமம் 2022-2023ம் ஆண்டு முதல் மூன்றாண்டு தொகுப்பு கால அளவிற்கு 2024-2025 வரை ஒப்பந்தப்புள்ளி கோர, பொது ஏலம் அறிவிக்கப்பட்டு 25.02.2021, 09.03.2021, 23.07.2021, 13.08.2021, 28.09.2021, 22.12.2021 ஆகிய தேதிகளில் ஏலம் கோரப்பட்டதில் யாரும் முன்வரவில்லை. மேலும், 26.01.2022 முதல் தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் இருந்ததால் தொடர்ந்து துறை வசூல் மூலம் மேற்படி கட்டணம் வசூல் செய்யப்பட்டு வந்தது. தற்பொழுது 08.04.2022 அன்று நடைபெற்ற ஏலத்தில் திரு. எஸ்.முருகையன் என்பவர் மட்டுமே கலந்து கொண்டு அதிகபட்ச ஏலத்தொகை ரூ.8000/- ஏலம் கோரியுள்ளார். 2019-2020ம் ஆண்டு ஏல கேட்பு தொகை ரூ.6540/- ஆகும். இந்நிலையில் கொரோனா கால கட்டங்களில் தமிழக அரசால் முழு ஊரடங்கு மற்றும் சில கட்டுபாடுகள் விதிக்கப்பட்டதால் அதிக அளவில் வாகனங்கள் ஏதுவும் ஓடாத நிலையில் 2020-2021 மற்றும் 2021-2022 ஆகிய ஆண்டுகளும் துறை மூலம் வசூல் மேற்கொண்டு வருவதால் நிர்வாக நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு ரசீது புத்தகம் அச்சிடுவது, பணியாளர் ஊதியம் மற்றும் ஒவ்வொரு வருடமும், 5% குத்தகை உயர்வு ஆகியவற்றை கருத்தில் கொண்டு மேற்படி ஏல கேள்வி எழுப்பிய திரு. எஸ்.முருகையன் என்பவருக்கு மேற்படி குத்தகை உரிமத்தை ஒப்படைக்க மன்ற முன் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு தோப்புத்துறை செக்போஸ்ட் வசூல் செய்யும் உரிமத்திற்கு பலமுறை ஏலம் கோரியும் துறை மூலம் வசூல் மேற்கொண்டு வருவதால் நிர்வாக நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு, பணியாளர் ஊதியம் மற்றும் ஒவ்வொரு வருடமும், 5% குத்தகை உயர்வு ஆகியவற்றை கருத்தில் கொண்டு தற்பொழுது ஏலம் கோரியுள்ள எஸ்.முருகையன் என்பவரின் ஏல கேள்வியை உறுதி செய்து குத்தகை உரிமத்தை ஒப்படைத்ததை மன்றம் அங்கீகரிக்கலாம். | **<u>தீர்மான எண்.30</u>**<br>அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.04.2022 | **<u>பொருள் எண்.21</u>**<br><br>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள். 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032//ஆர்2 நாள்.01.04.2022 இந்நகராட்சி சொத்துவரி மற்றும் காலிமனை வரி பொது சீராய்வு -2022 மேற்கொள்ளப்பட உள்ளதால் சொத்துவரி சீராய்வு பணி தொடர்பாக பத்திரிகை விளம்பரம் செய்தால், பிரதன பட்டியல் செய்ய தேவையான படிவங்கள் நகல் எடுத்தல்/அச்சிடுதல், சுய மதிப்பீட்டு படிவங்கள் அச்சிடுதல், மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்தல், கணிணியில் பதிவேற்றம் செய்தல் மற்றும் சீராய்வு தொடர்பான மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளவும் அதற்கு தேவையான எழுது பொருட்கள், படிவங்கள் மேலும் இதர பொருட்கள் கொள்முதல் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00/- லட்சத்தினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. சுயமதிப்பீட்டு படிவங்கள் தமிழ்நாடு பல்நோக்கு சேவை கூட்டுறவு லிட், திருச்சிராப்பள்ளி நிறுவனத்தில் அச்சிட மன்றம் அனுமதி வழங்கலாம். | **<u>தீர்மான எண்.31</u>**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.04.2022 | **பொருள் எண்.22**<br><br>வேதாரண்யம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் இயங்கிவரும். வாகனத்தின் TN-51- AK-8498(TATA ACE)-LCV வாகனத்தின்ஆண்டு தகுதி சான்றதழ் (FC)முடிவுற்றுள்ளது. எனவே 2022-ம் ஆண்டிற்கான தகுதி சான்றிதழ் பெற வாகனத்தின் அத்தியாவசிய பராமரிப்பு மற்றும் பழுதுநீக்கம் செய்தல் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது. பொதுசுகாதார நலன் மற்றும் பொது மக்கள் நலனை கருத்தில் கொண்டு பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டும் மேற்படி பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.20000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) நகராட்சி நிதியில் மேற்கொள்ளவும், பணியீன் அவசர, அவசியம் கருதி தகுதியான உள்ளூர் நிறுவனங்களின் விலைப்புள்ளி பெற்று பணிமேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>பணியின் அவசியம் கருதி மேற்கண்ட பணி மேற்கொள்ளவும் அதர்கான உத்தேச செலவினம் ரூ.20000/-ம் மன்றம் முன் அனுமதி வழங்கியதையும், பணியீன் அவசர அவசியம் கருதி தகுதியான உள்ளூர் நிறுவனங்களின் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கியதையும் அங்கீகரிக்கலாம். | **தீர்மான எண்.32**<br>அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.04.2022 | **பொருள் எண்.23**<br><br>வேதாரண்யம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் இயங்கிவரும். வாகனத்தின் TN-51-AK-8444(TATA ACE) -LCV வாகனத்தின்ஆண்டு தகுதி சான்றிதழ் (FC)முடிவுற்றுள்ளது. எனவே 2022-ம் ஆண்டிற்கான தகுதி சான்றிதழ் பெற வாகனத்தின் அத்தியாவசிய பராமரிப்பு மற்றும் பழுதுநீக்கம் செய்தல் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது. பொதுசுகாதார நலன் மற்றும் பொது மக்கள் நலனை கருத்தில் கொண்டு பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டும் மேற்படி பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.20000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) நகராட்சி நிதியில் மேற்கொள்ளவும், பணியீன் அவசர, அவசியம் கருதி தகுதியான உள்ளூர் நிறுவனங்களின் விலைப்புள்ளி பெற்று பணிமேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>பணியின் அவசியம் கருதி மேற்கண்ட பணி மேற்கொள்ளவும் அதர்கான உத்தேச செலவினம் ரூ.20000-ம் மன்றம் முன் அனுமதி வழங்கியதையும், பணியீன் அவசர அவசியம் கருதி தகுதியான உள்ளூர் நிறுவனங்களின் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கியதையும் அங்கீகரிக்கலாம். | **தீர்மான எண்.33**<br>அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.04.2022 | **பொருள் எண்.24**<br><br>வேதாரண்யம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் இயங்கிவரும். வாகனத்தின் TN-51-AK-8444(TATA ACE) -LCV வாகனத்தின ஆண்டு தகுதி சான்றிதழ் (**FC**)முடிற்றுள்ளது , எனவே 2022-ம் ஆண்டிற்கான தகுதி சான்றிதழ் பெற வாகனத்தின் அத்தியாவசிய பராமரிப்பு மற்றும் பழுதுநீக்கம் செய்யும் பணிகள் மேற்கொள்ள தகுதியான உள்ளூர் நிறுவனங்களின் விலைப்புள்ளி பெற்று பணிமேற்கொள்ளவும், மன்றத்தின் முன் அனுமதி வழங்கியதையடுத்து ,கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்றுள்ளன விலைபுள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><br>1. துருவன் மோட்டார்ஸ், கார்ஒர்க்ஸ், 57, நந்தவனக்குளத்தெரு, வேதாரண்யம் -ரூ 18,657/-<br>2.அன்னை மாருதி சர்வீஸ் ஸ்டேசன்,நாகை மெயின் ரோடு, வேதாரண்யம் -ரூ.20,150/-<br>3.கன்மலை ஆட்டோ & டீசல் ஒர்க்ஸ், நாகை மெயின் ரோடு, வேதாரண்யம்- ரூ.20,250/-<br><br>அலுவலக குறிப்பு<br>பணியீன் அவசர அவசியம் கருதி குறைந்த விலைபுள்ளி வழங்கிய “துருவன் மோட்டார்ஸ், கார் ஒர்க்ஸ், 57, நந்தவனக்குளத்தெரு, வேதாரண்யம் “ என்ற நிறுவனத்தில் பெற்று பணிமேற்கொள்ள மன்றம் வழங்கியதையும் அங்கீகரிக்கலாம். | **தீர்மான எண்.34**<br>அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.04.2022 | **<u>பொருள் எண்.25</u>**<br><br>வேதாரண்யம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் இயங்கிவரும். வாகனத்தின் TN-51-AK-8498(TATA ACE) -LCV வாகனத்தின் ஆண்டு தகுதி சான்றிதழ் (**FC**) முடிற்றுள்ளது. எனவே 2022-ம் ஆண்டிற்கான தகுதி சான்றிதழ் பெற வாகனத்தன் அத்தியாவசிய பராமரிப்பு மற்றும் பழுதுநீக்கம் செய்தல் பணிகள் மேற்கொள்ள தகுதியான உள்ளுர் நிறுவனங்களின் விலைப்புள்ளி பெற்று பணிமேற்கொள்ளவும் மன்றத்தின் முன் அனுமதி வழங்கியதையடுத்து, கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><br>1. துருவன் மோட்டார்ஸ், கார்ஒர்க்ஸ், 57, நந்தவனக்குளத்தெரு, வேதாரண்யம் - ரூ.17,950/-<br>2.துர்க்கை அட்டோ சர்வீஸ் ஸ்டேசன்,நாகை மெயின் ரோடு, வேதாரண்யம் - ரூ.18,130/-<br>3.கன்மலை ஆட்டோ & டீசல் ஒர்க்ஸ், நாகை மெயின் ரோடு, வேதாரண்யம்- ரூ.18,450/-<br><br>அலுவலக குறிப்பு<br>பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைபுள்ளி வழங்கிய “துருவன் மோட்டார்ஸ், கார் ஒர்க்ஸ், 57, நந்தவனக்குளத்தெரு, வேதாரண்யம் “ என்ற நிறுவனத்தில் பெற்று பணிமேற்கொள்ள மன்றம் வழங்கியதையும் அங்கீகரிக்கலாம். | **<u>தீர்மான எண்.35</u>**<br>அங்கீகரிக்கப்பட்டது |
| 28.04.2022 | **<u>பொருள் எண்.26</u>**<br><br>வேதாரண்யம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் இயங்கிவரும். வாகனத்தின் TN-51-7443வாகனத்தின்ஆண்டு தகுதி சான்றிதழ் (**FC**) முடிவுற்றுள்ளது. எனவே 2022-ம் ஆண்டிற்கான தகுதி சான்றிதழ் பெற வாகனத்தின் அத்தியாவசிய பராமரிப்பு மற்றும் பழுதுநீக்கம் செய்தல் பணிகள் மேற்கொள்ள்ப்பட வேண்டியது அவசியமாகிறது. பொதுசுகாதார நலன் மற்றும் பொது மக்கள் நலனை கருத்தில் கொண்டு பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டும் மேற்படி பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.1,50,000/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நகராட்சி நிதியில் மேற்கொள்ளவும், பணியின் அவசர, அவசியம் கருதி தகுதியான உள்ளுர் நிறுவனங்களின் விலைப்புள்ளி பெற்று பணிமேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம் | **<u>தீர்மான எண்.36</u>**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.04.2022 | **<u>பொருள் எண்.27</u>**<br><br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வாட்ஸ்அப் செய்தியின்படி , இந்நகராட்சி பகுதியிலுள்ள **21** வார்டுகளிலும் மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகார அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறை கையேட்டில் குறிப்பிட்டுள்ளவாறு சுய உதவிக்குழுக்கள், பள்ளிகள் மற்றும் குடிமக்கள் பிரதிநிதிகள் ஆகியவரிடம் சுய அறிவிப்பு பெறப்பட்டது. எனவே இந்நகராட்சியினை தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் திறந்தவெளி கழிப்பிடமற்ற நகரம் (OPEN DEFECATION FREE +) மற்றும் குப்பையில்லா நகரத்திற்கான நட்சத்திர மதிப்பீட்டில் மூன்று நட்சத்திர தர மதிப்பீடு பெற (GARBAGE FREE CITY THREE STAR) சுய அறிவிப்பு செய்து , பொதுமக்களின் ஆட்சேபனையை பெற தினசரி நாளிதழ் **1.03.2022** –ல்விளம்பர அறிவிப்பு செய்யப்பட்டது, அதற்கான விளம்பரகட்டண பட்டியல் வரப்பெற்றுள்ளது.<br>தினமணி நாளிதழ் - ரூ.1932/-<br>தினகரன் நாளிதழ் - ரூ.20160/-<br>மேற்கண்ட விளம்பர கட்டணத் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>(அ) மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.<br>(ஆ) மேற்கண்ட நாளிதழ் விளம்பரச் செலவினத்தொகை ரூ.22,092/- தினமணி தினகரன் நாளிதலுக்கு தொகை வழங்க அனுமதி வழங்கலாம். | **<u>தீர்மான எண்.37</u>**<br>அனுமதிக்கப்பட்டது |
| 28.04.2022 | **<u>பொருள் எண்.28</u>**<br><br>வேதாரண்யம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் TN 51J1570 –SMC மினி டிப்பர் லாரி வாகனத்தின் ஆண்டு பராமரிப்பு மற்றும் தனிசான்று பெறுதல் (FC) அவசியமாகிறது, எனவே பொதுசுகாதார நலன் மற்றும் பொதுமக்கள் நலனையும், பணியின் அவசியத்தையும் கருத்தில் கொண்டு மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும், அப்பணிக்கான உத்தேசசெலவினம் ரூ.75,000/-ம் (ருபாய் எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளவும் பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிஅறிவிப்பு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறத.<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். | **<u>தீர்மான எண்.38</u>**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.04.2022 | **<u>பொருள் எண்.29</u>**<br><br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர், அவர்களின் கடிதம் ந.க.எண்.**2340/2021/**அ**1**, நாள் - **06.04.2022** –ன் படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக பொலிரோ ஈப்பு வாகனம் எண் - TN 49 CG 0555 -ன் அத்தியாவசிய பராமரிப்பு மற்றும் பழுது பார்த்ததற்கான பட்டியல் தொகை ரூ.**30,124/-** (ரூபாய் முப்பதாயிரத்து நூற்று இருபத்து நான்கு மட்டும்) வழங்கிட கேட்டுக்கொள்ளப்பட்டது. எனவே பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை பணிமேற்கொண்ட “ SHIVA AUTO MOBILES PVT LTD ” நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br><br>SHIVA AUTOMOBILES PVT LTD THANJAVUR - நிறுவனத்திற்கு ரூ.**30124/-**யை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். | **<u>தீர்மான எண்.39</u>**<br>அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.04.2022 | **<u>பொருள் எண்.30</u>**<br><br>வேதாரண்யம் நகராட்சி, பொதுசுகாதாரப் பிரிவு கீழ்கானும் வாகனங்களின் **2022-2023**–ம் ஆண்டிற்கான வாகன காப்பீடு செய்ய வேண்டியது அவசியமாகிறது, இந்நிலையில் நகர்புற உள்ளாட்சி தேர்தல் **-2022** க்கான தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது**.** தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **-1920,**பிரிவு **-15-**ன் கீழ் மேற்கண்ட பணி செய்து முடிக்கப்பட்டதை கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது<br>1 . TN 51-AK-8404-TATA ACE -20267<br>2 . TN 51-AK-8427-TATA ACE -20424<br>3 . TN 51-AK-8466-TATA ACE -20267<br>4 . TN 51-AK-8475-TATA ACE -21966<br>5 . TN 51-AK-8444-TATA ACE -20267<br>6 . TN 51-AK-8498-TATA ACE -20267<br>7 . TN 51-AK-8480-TATA ACE -20267<br>8 . TN 51-AK-8461-TATA ACE -20267<br>9 . TN 51-AD-6589- ஆம்புலன்ஸ்**-11840**<br>கூடுதல் **175832**<br>அலுவலக குறிப்பு<br>**1.** பதிவு செய்யலாம்**.**<br>**2.** பணியின் அவச, அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **-1920** பிரிவு **-15-** ன் கீழ் பணிகள் மேற்கொண்டவாறு மன்றம் அங்கீகரிக்கலாம்**.** | **<u>தீர்மான எண்.40</u>**<br>அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.04.2022 | **பொருள் எண்.31**<br><br>வேதாரண்யம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இயங்கிவரும் TN-51C-7967- டிப்பர்லாரி வாகனத்தின் பேட்டரி முற்றலும் பழுதடைந்து இயங்காத நிலையில் உள்ளது. எனவே வாகனத்தின் பேட்டரியை முற்றிலுமாக மாற்றம் செய்ய வேண்டியது அவசியமாகிறது, இந்நிலையில் SBM – திட்ட பணியின் முக்கியத்துவம் கருத்தில் கொண்டு வேற்கண்ட வாகனத்தின் பேட்டரியை புதிதாக மாற்றிடவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) நகராட்சி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணிக்கு கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரபெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் / ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>1 . லியோ ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் டிடிபி ரோடு வேதாரண்யம் - ரூ.7700/-<br>2 . ராதா பவர் பாயிண்ட் அறந்தாங்கி ரோடு பட்டுக்கோட்டை - ரூ.7800/-<br>3 . அங்கப்பா பேட்டரி சென்டர் , அறந்தாங்கிரோடு பட்டுக்கோட்டை - ரூ.7750/-<br><br>அலுவலக குறிப்பு<br>மேற்கண்ட பணிக்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய லியோ ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ், டிடிபி ரோடு வேதாரண்யம் நிறுவனத்தில் பேட்டரி வாங்கிடவும் அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.41**<br>அனுமதிக்கப்பட்டது |
| 28.04.2022 | **பொருள் எண்.32**<br>வேதாண்யம் நகராட்சி நகர்புற உள்ளாட்சி தேர்தல் 2020 –ஐ முன்னிட்டு வாக்கு சாவடிகள் வாக்கு சாவடி மையங்களில் பொது சுகாதார ஆயத்த பணிகள் மேற்கொள்ளவும், நோய்தொற்று தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் மற்றும் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ள, பொது சுகாதார பணிக்கு தேவையான கிருமி நாசினிகள், தளவாடப் பொருட்கள் வாங்க வேண்டியது அவசியமாகிறது. பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மாவட்ட நதராட்சிகள் சட்டம் - 1920, பிரிவு -15-ன்கீழ் மேற்கண்ட பணி செய்து முடிக்கப்பட்டதையும், அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.5,00,000/-ம் செலவு மேற்கொள்ளவும் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>பணிமேற்கண்ட நிறுவனத்தின்பெயர் :<br>''மகிழ் டிரேடர்ஸ் , 10 முதல்தளம், கீழசந்திரபேட்டை, மதுரை -6250001.<br>அலுவலக குறிப்பு (அ) மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ஆ) பணிகள் அவசர அவசியம் கருதி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 –பிரிவு -15-ன்கீழ் பணிகள் செய்து முடித்தற்கான மேற்படி செலவினத் தொகையை வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.42**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28.04.2022 | **பொருள் எண்.33**<br>வேதாரண்யம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இயங்கிவரும் TN-51AK-8480- டிப்பர் ஆட்டோ வாகனத்தின் பேட்டரி முற்றிலும் பழுதடைந்து இயங்காத நிலையில் உள்ளது. எனவே வாகனத்தின் பேட்டரியை முற்றிலுமாக மாற்றம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. இந்நிலையில் SBM – திட்ட பணியின் முக்கியத்துவம் கருத்தில் கொண்டு வேற்கண்ட வாகனத்தின் பேட்டரியை புதிதாக மாற்றிடவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.5000/- (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) நகராட்சி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணிக்கு கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரபெற்றுள்ள விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் /ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>1 . லியோ ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் டிடிபி ரோடு வேதாரண்யம் - ரூ 4700/-<br>2 . ராதா பவர் பாயிண்ட் அறந்தாங்கி ரோடு பட்டுக்கோட்டை - ரூ 4800/-<br>3 . அங்கப்பா பேட்டரி சென்டர், அறந்தாங்கிரோடு பட்டுக்கோட்டை -ரூ4750/-<br>அலுவலக குறிப்பு<br>மேற்கண்ட பணிக்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய லியோ ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் டிடிபி ரோடு வேதாரண்யம் நிறுவனத்தில் பேட்டரி வாங்கிடவும் அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.43**<br>அனுமதிக்கப்பட்டது |

நகர்மன்றத்தலைவர்,
வேதாரண்யம் நகராட்சி.